[1983 சனவரி 27

அரசு போக்குவரத்துக் கழகங்களில் வசூல் போனஸ் வழங்கும் திட்டம்.

*வினா எண் 16—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர் நடத்துனர்கட்கு வசூல் போனஸ் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்தப் போக்குவரத்துக் கழகங்களில் எவ்வளவு வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக மற்ற அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில், மாவட்ட வழித் தடங்களில் (Mofussil routes) இயக்கப்படும் பேருந்துகள் அன்று ஈட்டும் வருவாயில் 2.2 சதவிகிதம், அந்தந்தப் பேருந்துகளின் ஓட்டுநருக்கும் நடத்துனருக்கும் சமமாக பகிர்ந்து அளிக்கப்படுகிறது. மேலும் பாண்டியன், சோழன், சேரன் மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகங்களின் நகர்ப்புற வழித்தடங்களில் (Town routes) தினசரி ஈட்டும் வருவாயில் 3 சதவிகிதமும் பல்லவன் புறநகர் மற்றும் பெருநகர் மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களின் நகர்ப்புற வழித்தடங்களில் 3.5 சதவிகிதமும் அவ்வண்ணமே ஓட்டுநர் நடத்துனருக்கு சமமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் தினசரி வசூலில் 0.67 சதவிகிதம் ஓட்டுநர் நடத்துனர்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர், நடத்துனர்களுக்கு வழங்கப்படுகின்ற வசூல் போனஸ் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் மாறுபட்டு இருக்கிறதே. அதை எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரே மாதிரியாக வழங்க அரசு முன்வருமா? அதோடு வழங்கப்படுகிற படி போதுமானதாக இல்லை; அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்கப்படுகிறதே; அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மற்ற போக்குவரத்துக் கழகங்களைவிட மாறுபட்டு இருப்பதால் அவர்களுக்கு வழங்கப்படும் வசூல் போனஸ் சற்று வேறுபட்டு இருக்கிறது. மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகத்தான் கொடுக்கப்படுகிறது. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் சிறிது உயர்ந்திருக்கிறது. அதைக்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1983 சனவரி 27]

குறைப்பதற்கான எண்ணம் அரசுக்கு இல்லை. மேலும் இந்த வசூல் போனஸ் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று யாரும் சொல்லவில்லை. 6 மாதங்களுக்கு முன்னால் அப்படிச் சொன்னார்கள். அதன் பிறகு கட்டணம் ஓரளவுக்கு உயர்த்தப் பட்டிருப்பதால் வசூல் போனசும் உயர்ந்திருக்கிறது. இருந்தாலும் அதுபற்றி கோரிக்கை வரும்போது அரசாங்கம் கனிவோடு பரிசீலனை செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கும்பகோணத்தில் இருக்கிற சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கொடுக்கப் படுகிற வசூல் போனஸ் குறைவாக இருக்கிறது; அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சேரனும் அதையேதான் கொடுக்கிறது; அண்ணாவும் அதைத்தான் கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது சோழன் மட்டும் உயர்த்திக்கொடுப்பது நியாயமில்லை.

புதிய நகர்ப்புற பேருந்துகள் விடும் திட்டம்.

*வினா எண் 17— திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய நகர்ப்புற பேருந்துகள் எந்த அடிப்படையில் விடப்படுகின்றன?

(ஆ) முடிவு எடுக்கும்போது மக்கள் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) பொதுமக்களிடமிருந்து நகரப் பேருந்து விடுமாறு கோரி வரப்பெற்ற மனுக்கள் பரிசீலிக் கப்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தின் முக்கியத்துவம், மக்கள் தொகை இவற்றைக் கணக்கிட்டு, தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்ட பின்பு புதிய நகர்ப்புற பேருந்துகள் விடுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

திரு. கே. நாராயணசாமி: தலைவரவர்களே, சில முனிசிப் பாலிட்டிகளுக்கு டவுன் பஸ் விடப்படுகிறது. மேஜர் பஞ்சாயத் துக்கும் டவுன் பஸ் விடப்படுகிறது. ஆனால் எங்களுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் மேஜர் பஞ்சாயத்துக்கு டவுன்பஸ் விடப்